# டிரான்ஸ்பிரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
## தேசிய நேர்மைக்கான விருது – 2009 (விஷேடமாக குறிப்பிடுதல்)

திருமதி. ஜராங்கனி டி சில்வா

இலங்கை மிருக நலன்புரி அமைப்பின் தலைவி திருமதி. ஜராங்கனி டி சில்வா இலங்கையில் மிருக வதை இடம்பெறும் முறை தொடர்பாக ஆய்வுசெய்து அதனுடன் இணைந்த பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு மாற்றத்தை ஏற்படுத்தியதன் மூலம் அந்த பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண்பதற்கு முன்னோடியாக செயல்படும் பெண்மணியாவார்.

தெஹிவளை பரிசுத்த கன்னியர் மடம் மற்றும் கொட்டாஞ்சேனை எடேரா கன்னியர் மடம் ஆகியவற்றில் கல்வி பயின்று மகாவலி அபிவிருத்தி அமைச்சு தனியார் உதவியாளர், வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் சுகாதார அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர் போன்ற பல பதவிகளை வகித்த திருமதி ஜராங்கனி பல தசாப்தங்களாக இலங்கையில் பாரியளவில் இடம்பெறும் சட்ட விரோத பசுகடத்தல் மற்றும் வன விலங்குகளை அழிப்பதற்கு எதிராக பாரிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த சட்ட விரோத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட அரசியல் புள்ளிகள், அரச அதிகாரிகள், மற்றும் கள்ளச் சந்தைக்காரர்கள் உட்பட்ட வலையமைப்பை இனங்கண்டு அவர்கள் தப்பிச் செல்லும் வழிகளை அடைப்பதற்காக பலம்மிக்க கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்காக பாடுபடும் இவர் காலம்கடந்த விலங்குகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் மிருகவதை சட்டம் ஆகியவற்றின் குறைகளை சுட்டிக்காட்டி இந்த சட்டமூலங்களுக்காக புதிய திருத்தங்களை முன்வைப்பதில் வெற்றிகண்டுள்ளார். 1958 விலங்குகள் சட்டம் மற்றும் 1980 சட்டமூலங்களில் புதிய திருத்தங்களை உட்படுத்தி 2009ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டமூலம் ஜராங்கனி டி சில்வாவின் பெருமுயற்சியின் பயனாகும்.

இந்த சட்டத்தை அறிமுகப்படுத்திய பின்னர் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்துவதற்காக பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தினார். சட்டங்கள் முறையாக செயற்படுத்துவதற்காக தகுதியான மாதிரியை தயாரித்து அதை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு பகிந்தளிப்பதும் திருமதி. ஜராங்கனியின் தலைமையில் நடைபெற்றது.

‘எனக்கு விலங்குகள் குறித்து விஷேட ஆர்வம் இருந்தது. சிறு வயதில் எங்களது வீட்டில் நாயை சுட்டுகொல்வதற்கு பொலிஸார் வந்தனர் அப்போது எனக்கு சுமார் 5 வயது இருக்கும் அன்று நான் நாயை கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்து விட்டு அழுதுகொண்டே எனது நாயை காப்பாற்றிவிட்டேன். சிறு வயதில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிதான் மிருக வதை குறித்து மேலதிக விடயங்களை தேடுவதற்கு வழியமைத்தது.

இருந்தும் இலங்கையை போன்ற நாட்டில் விலங்குகள் சட்டம், விலங்கு சித்திரவதையை தடுக்கும் சட்டம் ஆகியவற்றை செயற்படுத்வது எளிதல்ல அரசியல்வாதிகள் இதுபோன்றவை குறித்து சிறிதும் அனுதாபம் காட்டுவதில்லை. 7 வருடங்களாக நாங்கள் பெரும் முயற்சியை மேற்கொண்டு சட்ட ஆணைக்குழு அதிகாரிகளுடன் விவாதித்து நிறைவேற்றி அனுப்பிய மிருக நலன்புரி சட்டமூலம் இன்னும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது’.

புதிய மறுசீரமைப்பை ஏற்படுத்த இருக்கும் தடைகள் தொடர்பாக கருத்து தெரிவித்து திருமதி. ஜராங்கனி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

சட்ட விரோத பசு கடத்தல் தொடர்பாக குற்றவாளியாக காணப்படுபவருக்கு குறைந்த தண்டனை வழங்குதல், திருடிய விலங்குகளை மீண்டும் குற்றவாளிக்கே உரிமையாக்குதல் போன்ற சட்டத்தினுள்ள வெற்றிடத்துடன் கடுமையாக மோதும் திருமதி ஜராங்கனி இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து இது தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகளுக்கு பொலிஸாருக்கு உதவியளித்து இன்றுவரை 30 க்கும் அதிகமான வழக்குகளை நடத்தி வருகிறார். அதேபோல் 2008 / 2009 வருடங்களில் இவரின் அமைப்பால்

மேற்கொண்ட வழக்குகள் காரணமாக ஆயிரக்கணக்கான பசுக்களை மீட்டு அரசிடம் ஒப்படைக்க இவரால் முடிந்திருக்கிறது.

மிருகவதை மற்றும் கொலை தொடர்பாக இந்நாட்டு சட்டத்தில் நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அந்த சட்டங்களை பலப்படுத்துவதற்காக திருமதி. ஜராங்கனி டி சில்வா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்.